செய்தி வெளியீடு எண்: 566 நாள்: 14.03.2024

# செய்தி வெளியீடு

**அரசு தனியார் பங்களிப்பின் (Hybrid Annuity Model) கீழ் அடையாறு ஆற்றை சீரமைப்புதிட்டத்திற்காகமாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ரூ.4778.26 மதிப்பீட்டில் நிர்வாக நிதிஅனுமதிவழங்கி உத்தரவிட்டுள்ளார்கள்.**

–oOo–

நகர்ப்புரங்களில் உள்ள அனைத்து மக்களுக்கும் தூய்மையான, பசுமையான மற்றும் நிலையான ஆரோக்கியமான சுற்றுச்சூழலைவழங்குவது தமிழ்நாடு அரசின்நோக்கமாகும். இவ்விலக்கினை அடையும் பொருட்டு, ஆறுகள் மற்றும் நீர்நிலைகளின்சுற்றுச்சூழலைசீரமைக்க தேவையான திட்டங்களை தயாரித்தல், ஒருங்கிணைத்தல், சீரமைப்புப் பணிகளை கண்காணித்தல் மற்றும் சென்னை பெருநகரத்திற்கு உட்பட்ட கூவம், அடையாறு, கொசஸ்தலையாறு, பக்கிங்காம்கால்வாயுடன் இன்னும் பிற கிளைகால்வாய்கள், முகத்துவாரங்கள் மற்றும் கழிமுகங்களை சீரமைத்தல் ஆகிய பணிகளைசென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளை மூலம் தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது.

மேற்கண்ட இலக்குகளைஅடையவும், நகரின்சுற்றுச்சூழலைமேம்படுத்தவும் பல்வேறு சார்துறைகளுடன்ஒன்றிணைந்து சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளை பல்வேறு திட்டங்களை மேற்கொண்டு வருகிறது.

**நடைபெற்று வரும் சுற்றுச்சூழல் சீரமைப்பு திட்டங்கள்**

பெருநகரில் உள்ள ஆறுகளின்சுற்றுச்சூழலை மேம்படுத்த தமிழ்நாடு அரசினால், ஒருங்கிணைந்த கூவம் நதி சுற்றுச்சூழல் சீரமைப்புத் திட்டம் மற்றும் அடையாறு நதி சீரமைப்பு திட்டம்ஆகியதிட்டங்கள்சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளையின் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

இச்சீரமைப்பின்துணைத்திட்டங்கள் தொடர்புடைய சார்துறைகளால்செயல்படுத்தப்பட்டு வருகின்றன; தூர்வாருதல், சிறுகால்வாய் அமைத்தல் மற்றும் வெள்ளதடுப்புச்சுவர் அமைத்தல்போன்றபணிகள்நீர்வளத்துறையால்மேற்கொள்ளப்படுகின்றது.திடக்கழிவு அகற்றுதல், பாதுகாப்பு வேலிகள் அமைத்தல், மிதவை தடுப்பான் அமைத்தல், பாலங்களை அழகுபடுத்துதல்,பூர்வீகத்தாவரங்கள்நடவுசெய்தல் மற்றும்

நதிக்கரையோரமேம்பாட்டுப் பணிகள் பெருநகர சென்னை மாநகராட்சி,நகராட்சி நிர்வாக இயக்குநரகம்மற்றும் ஊரக வளர்ச்சி இயக்குநரகத்தால்மேற்கொள்ளப்படுகின்றன.சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியத்தால் – கழிவுநீரைஇடைமறித்தல் மற்றும் மாற்று வழிகளை அமைத்தல், நவீன கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் ஏற்படுத்துதல் மற்றும் பாதாள சாக்கடை திட்டம் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. மேலும், ஆற்றின் கரையோரங்களில் வசிக்கும் குடும்பங்களுக்கானமறுகுடியமர்வு மற்றும் மறுவாழ்வு திட்டங்கள் தமிழ்நாடு நகர்ப்புரவாழ்விடமேம்பாட்டுவாரியத்தால்செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**ஒருங்கிணைந்த கூவம் நதி சுற்றுச்சூழல் சீரமைப்புத்திட்டம்**

தமிழ்நாடு அரசு, ஒருங்கிணைந்த கூவம் நதி சுற்றுச்சூழல் சீரமைப்பு பணிகளைபருத்திப்பட்டுஅணையிலிருந்துமுகத்துவாரம்வரையிலான 32 கி.மீ தூரம்மேற்கொள்ள ரூ.735.08கோடிக்குநிர்வாக அனுமதி வழங்கியுள்ளது. இச்சீரமைப்புத்திட்டத்தின் முக்கிய கூறுகள்: கழிவுநீர் கூவம் நதியில் கலப்பதை தடுக்க மாற்று ஏற்பாடுகளை செய்தல், திடக்கழிவுகளை அப்புறப்படுத்துதல், நதியின்வெள்ளநீர்கொள்ளளவை மேம்படுத்துதல், கூவம்நதிக்கரையில் வாழும் மக்களுக்கான மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்வுக்கான திட்டம், பல்லுயிர்பெருக்கத்தை அதிகரித்தல் மற்றும் நதியின்கரையோரமேம்பாட்டு பணிகளை மேற்கொள்ளுதல் ஆகியவை ஆகும். இச்சீரமைப்புபணிகளின்முன்னேற்றத்தின் அடிப்படையில், இதுவரைரூ.545.22 கோடி நிதி சார் துறைகளுக்குவழங்கப்பட்டுள்ளது.

**பக்கிங்காம் கால்வாய் மற்றும் அதன் கிளை கால்வாய்கள், கூவம் மற்றும் அடையாறுஆறுகளின் கிளை கால்வாய்கள் சீரமைப்பு திட்டங்கள்**

சென்னை பெருநகரில் உள்ள நீர்வழித்தடங்களை முழுமையாகசீரமைப்பதற்காக, பக்கிங்காம் கால்வாய் மற்றும் அதன் பிரதான கிளை கால்வாய்கள், கூவம் மற்றும் அடையாறுஆறுகளின்கிளை கால்வாய்கள் சீரமைப்பு திட்டப்பணிகளுக்காக தமிழ்நாடு அரசு ரூ.1,281.88 கோடிநிர்வாக அனுமதி வழங்கியுள்ளது.தொடர்புடைய சார் துறைகளால்ஆயத்தப்

பணிகளானடிஜிபிஎஸ்கணக்கெடுப்புமூலம்எல்லைகணக்கெடுப்புமற்றும்எல்லைவரைய றுத்தல்போன்றமுதற்கட்டபணிகள்மேற்கொள்ளப்பட்டு, மறுக்குடியமர்வுமற்றும்மறுவாழ்வுக்கானகுடும்பங்களைகூட்டுபையோமெட்ரிக்கணக்கெடுக்கும்பணிகள்மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**அடையாறுமுகத்துவாரச் சுற்றுச்சூழல் சீரமைப்புத் திட்டம்**

அடையாறுமுகத்துவாரச் சுற்றுச்சூழல் சீரமைப்புத் திட்டம் (300 ஏக்கர்)இரண்டாம் கட்ட பணிகளைஅடையாறு உப்பங்கழி, முகத்துவாரம், சிறு தீவுகள், மணல் திட்டுகள் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் மேற்கொள்ள ரூ.24.93 கோடிக்கு தமிழ்நாடு அரசு அனுமதி வழங்கியது.

இதன் முக்கியக்கூறுகளாக, சீமைக்கருவேல மரங்கள் மற்றும் முட்புதர்கள் முற்றிலும் அகற்றப்பட்டு, கரைகள்திடப்படுத்தப்பட்டு,நெகிழி மற்றும் கட்டடக்கழிவுகளை அகற்றி, உப்பங்கழியில்மிதந்தமட்காதநெகிழி பொருட்கள் மற்றும் திடக்கழிவுகளை அகற்றி மற்றும் ஆழப்படுத்தி, ஓதத்தின் தொடர்பு மற்றும் நீர்பரப்புபகுதிஅதிகரிக்கப்பட்டுள்ளது. இதில், பல்லுயிர்பெருக்கத்தைஅதிகரிக்கும் வகையில் சதுப்புநிலத்தாவரங்கள் மற்றும் உள்ளூர் தாவரங்கள்நடப்பட்டுள்ளன.

அடையாறு உப்பங்கழி மற்றும் முகத்துவாரப்பகுதிகளில் (358 ஏக்கர்) சமீபத்தில் நடத்தப்பட்ட கணக்கெடுப்பின்படி, மெல்லுடலிகள், நண்டுகள், தும்பிகள், பட்டாம்பூச்சிகள், மீன்கள், இருவாழ்விகள், ஊர்வன, பறவைகள் மற்றும் பாலூட்டிகள் போன்ற 424 வகையான விலங்குகள் உள்ளன. சீரமைப்பிற்கு முன்பு இந்த எண்ணிக்கை 141 ஆக இருந்தது. சீரமைக்கப்பட்டஅடையாறு உப்பங்கழி மற்றும் முகத்துவாரம்நகர்ப்புராஈரநிலபல்லுயிர்பெருக்கத்தின்வாழ்விடமாகத்திகழ்கிறது.

**அடையாறு நதி சீரமைப்பு திட்டம்**

அடையாறுநதியின் சுற்றுச்சூழல்சீரமைப்புபணிகளுக்குதமிழ்நாடு அரசு ரூ.555.46 கோடிநிர்வாக அனுமதி வழங்கி,முக்கிய பணிகளானகழிவுநீர் மேலாண்மை, திடக்கழிவு அகற்றுதல், நதியின்வெள்ளநீர்கொள்ளளவை மேம்படுத்துதல், மறுகுடியமர்வு மற்றும் மறுவாழ்வுக்கான பணிகள், பல்லுயிர்பெருக்கத்தை அதிகரித்தல் மற்றும்

நதியின்கரையோரமேம்பாட்டு பணிகளை மேற்கொள்ளுதல் ஆகியவை நடைபெற்றுவருகின்றன.

இச்சீரமைப்பு பணிகள் தொடர்புடைய சார்துறைகளால் பல்வேறு நிலைகளில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. சீரமைப்பு பணிகள் மார்ச் 2024–ல்முடிக்கப்படஉத்தேசிக்கப்பட்டுள்ளது.இச்சீரமைப்புபணிகளின்முன்னேற்றத்தின் அடிப்படையில்,இதுவரைசார் துறைகளுக்குரூ.372.29 கோடிநிதி வழங்கப்பட்டுள்ளது.

**சிறப்புநோக்குநிறுவனம் (Special Purpose Vehicle) மூலம்அடையாறுநதியை சீரமைக்கும்ஒருக்கிணைந்ததிட்டம்.**

சென்னையில் உள்ள முக்கிய நீர் வழித்தடங்களைசீரமைத்திடதமிழ்நாடு அரசு முனைப்புடன் செயல்பட்டு வரும் நிலையில் இதன் தொடர்ச்சியாக, இதற்கு முன்னெழும்பல்வகைசவால்களையும், ஆற்றில்தொடர்ந்துகலக்கும்கழிவுநீரைதடுக்கஒரு ஒருங்கிணைந்த திட்டமும், முயற்சியும் அவசியம் என அரசு கருதியது.அதன் முதற்கட்டமாக, தமிழ்நாடு அரசு23–24ஆம் ஆண்டிற்கானநிதிநிலை அறிக்கையில், (79.)"*சிங்காரச் சென்னையை உருவாக்கும் முயற்சியின் ஒரு பகுதியாக, அடையாறு, கூவம் உள்ளிட்ட நீர்வழிகளை சுத்தப்படுத்தி, மறுசீரமைக்க அரசு திட்டமிட்டுள்ளது. இந்த முயற்சிகளின்முதற்கட்டமாக44கி.மீ.நீளமுள்ளஅடையாறு ஆற்றில் மறுசீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும். இத்திட்டத்தில் கழிவுநீர் ஆற்றில் கலப்பதைத் தடுத்தல், கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைத்தல் போன்ற ஆற்றைத்தூய்மைப்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்படும். மேலும் எழில் கொஞ்சும்பூங்காக்கள், பசுமை நடைபாதைகள், திறந்தவெளி உடற்பயிற்சிக்கூடங்கள் தரமான அருந்தகங்கள் போன்ற கண்கவர் பொழுதுபோக்கு அம்சங்கள் அடையாறுஆற்றங்கரையை அலங்கரிக்கும்.இத்திட்டம் அரசு–தனியார் பங்களிப்புடன் ஏறத்தாழ 1,500 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும்."* என அறிவித்தது.

இதனை தொடர்ந்து, சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளை மூலம் வரைவு சாத்தியக்கூறு திட்ட அறிக்கைதயாரிக்கும் பணியினை மேற்கொள்ள தமிழ்நாடு நீர் முதலீடு நிறுவனத்திற்கு உத்தரவு வழங்கப்பட்டது.இத்திட்ட சாத்தியக்கூறு அறிக்கையானது,

- தேசிய தர நிர்ணயங்களின்படி (மத்திய மாசு வாரியத்தால்நிர்ணயிக்கப்பட்ட சிறந்த பயன்பாடு – நீர் தர அளவுகோல்) மீன்கள் உட்படபல்லினபெருக்கத்திற்கு தேவையான நீரின்தரத்தைஅடைவதற்கான நிலையான அணுகுமுறையை பின்பற்றுதல்,மாசுபாட்டை திறம்பட குறைத்தல் மற்றும் நதியினை பாதுகாத்தல்.
- நீரின் தரம் மற்றும் நீடித்த வளர்ச்சியை உறுதி செய்யும் நோக்கத்துடன் நதிகளில்குறைந்தபட்ச சூழல் நீரோட்டத்தை பராமரித்தல், நடைப்பெறும் திட்டங்களை மறுஆய்வு செய்தல்.
- இடைவெளிகளை அடையாளம் கண்டு நதிகளின்வெள்ள கடத்தும் திறனையும் சேர்த்து உறுதி செய்வதற்கான மேம்பாடுகளை பரிந்துரைத்தல், நகரமயமாக்கப்பட்ட பகுதிகளில் சாத்தியமான இடங்களில் நதி முகப்புமேம்பாட்டைக் கண்டறிதல், போன்றவற்றைநோக்கமாககொண்டுதயாரிக்கஉத்தரவிடப்பட்டிருந்தது.

மேலும்,இச்சாத்தியக்கூறுஅறிக்கையை ஆய்வு செய்வதற்காகஅமைக்கப்பட்ட மாநில அளவிலான தொழில்நுட்பவல்லுனர் குழுவின் விரிவான ஆய்வுக்கு பிறகு பரிந்துரைக்கப்பட்டமாற்றங்கள் மற்றும் திருத்தங்களை உள்ளடக்கிய சாத்தியக்கூறு அறிக்கையைதமிழ்நாடு நீர் முதலீடு நிறுவனம் இறுதியாக சமர்ப்பித்தது.

இத்திட்டத்தின் முக்கிய கூறுகளாவன, i) பயன்படுத்தப்பட்ட நீர் மேலாண்மை;ii) ஆற்று வாய்க்கால் மேம்பாட்டுப் பணிகள்; (iii) ஆற்றங்கரை மேம்பாட்டுப் பணிகள்; மற்றும் (iv) திடக்கழிவு மேலாண்மை ஆகும்.

இத்திட்டசெயலாக்கத்திற்குகட்டுமான பணிகள் உள்பட தேவையான காலம் 36 மாதங்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது. கட்டுமானம் முடிந்ததிலிருந்து 15 ஆண்டுகள் ஒரு நிலையான செயல்பாடு மற்றும் பராமரிப்பு பொறுப்புடன் கூடிய காலத்தையும்இத்திட்டம் உள்ளடக்கி உள்ளது. முக்கியமாக,இத்திட்டத்தினை செயல்படுத்த தேந்தெடுக்கப்படும் நிறுவனத்திற்கு பணி நிறைவேற்றத்திற்கானபணமளிப்புமுறை, நிர்ணயிக்கப்பட்டுள்ளமேற்குறிப்பிடப்பட்டுள்ளமுக்கிய கூறுகளின்செயல்திறத்திற்கானதரகுறியீடுகளைஅடைவதுடன்முற்றிலும் இணைக்கப்பட்டுள்ளது.

மேலும், சாத்தியக்கூறு அறிக்கையில், இத்திட்டத்தை பொதுத்துறை மற்றும் தனியார் பங்கேற்பின் கீழ் செயல்படுத்த ஆலோசனை வழங்கியதுடன்,

அடையாறுநதியின்சீரமைப்புப் பணிகளை பல்வேறு பங்களிப்பாளர்களுடன் இணைந்து சிறப்பாக செயல்படுத்துவதைஉறுதிசெய்திட ஒரு சிறப்பு நோக்கு நிறுவனத்தை உருவாக்கவும்பரிந்துரைக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக இத்திட்டத்தினை செயல்படுத்த தேர்ந்தெடுக்கப்படும் நிறுவனம் மூலதனகட்டுமானபணிகளுக்கானதொகையில் 50% சதவிகதத்தை முதலீடு செய்ய வேண்டும்.

இதன் தொடர்ச்சியாகஅடையாறுநதியை சீரமைத்தல்திட்டத்தினைஅரசு தனியார் பங்களிப்புடன்செயல்படுத்துவதற்கானகொள்கைஅளவிலான (In–principle approval) அனுமதியைதமிழ்நாடு அரசு (அரசாணைஎண்.91, ந. நி.(ம) கு. வ. துறை, நாள்: 10.07.2023) வழங்கியது .

அடையாறுநதியின் சீரமைப்பு, புனரமைப்பு, இயக்கம் மற்றும் பராமரிப்பு தொடர்பான திட்டங்கள் மற்றும் திட்டங்களை திட்டமிடுதல், வடிவமைத்தல்,நிதியுதவி அளித்தல், கொள்முதல் செய்தல்,நிர்மானித்தல், மேற்பார்வை செய்தல்,கண்காணித்தல்,புனரமைத்தல், உருவாக்குதல், இயக்குதல், பராமரித்தல் மற்றும் மேலாண்மை செய்தல் ஆகிய பணிகளை ஒருங்கிணைந்துமேற்கொள்ள ChennaiRiversTransformationCompanyLimited (CRTCL) என்ற பெயரில் ஒரு சிறப்பு நோக்கு நிறுவனம்உருவாக்கிடவும் தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

தமிழ்நாடு நீர் முதலீடு நிறுவனம் தயாரித்த வரைவு சாத்தியக்கூறு அறிக்கைஅடிப்படையில்மூலதனம், இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகள் உள்ளடக்கிய ஒப்பந்ததிற்கானஒப்பந்தப்புள்ளிகள்சென்னைப்பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்றுவாரியத்தால்கடந்த ஆகஸ்ட் மாதம் கோரப்பட்டது. பெறப்பட்டஒப்பந்தபுள்ளிகளைஇதற்கெனஅமைக்கப்பட்டநிபுணர்கள் அடங்கிய ஒப்பந்த ஆய்வுமற்றும் மதிப்பீடு குழுஆய்வுசெய்துகுழுவின்பரிந்துரையின்அடிப்படையில்தற்போது இதற்கான ஒப்பந்த நிறுவனத்தை சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்றுவாரியம்தேர்ந்தெடுத்துள்ளது.இப்பணிக்கானஒப்பந்த காலம்,தேர்ந்தெடுக்கப்படும் நிறுவனம், மூலதனகட்டுமானபணிகளுக்கானமுதலீட்டினை உறுதி செய்துதிட்ட செயலாக்கத்திற்கான வடிவமைப்பு உள்ளிட்ட முன்

நிபந்தனைகள்நிறைவேற்றிட6 மாதங்கள் எனவும், மூலதனகட்டுமானபணிகளுக்காக30 மாதங்கள் எனவும் மற்றும்இயக்குதல் மற்றும் பராமரிப்புக்காக15 ஆண்டுகள்எனவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

**திட்டபணிகள்**

செங்கல்பட்டு மாவட்டத்திலுள்ள கூடுவாஞ்சேரி தொடங்கி தாம்பரம்,திருநீர்மலை, மணப்பாக்கம்,ஆலந்தூர்,சைதாப்பேட்டை ஆகிய பகுதிகள் வழியாக பாய்ந்து வங்கக்கடலில் கலக்கும் அடையாறுநதியை மீட்டெடுத்து அழகுறச் சீரமைக்கும் இத்திட்டத்தின் கீழ்,அடையாறு ஆற்றின் இரு கரைகளிலும்70 கிலோமீட்டர்தூரத்திற்கு கழிவுநீர் குழாய்கள் அமைத்து கழிவுநீரைதடுத்து,குழாய்கள் மூலமாக கழிவுநீர் சுத்தகரிப்பு நிலையங்கள் கொண்டு செல்லப்படும்.இதர்கெனநாள் ஒன்றிக்கு110மில்லியன்லிட்டர்கொள்ளளவு கொண்ட 14 கழிவுநீர் சுத்தகரிப்பு நிலையங்கள்,டாக்டர்.ராதாகிருஷ்ணபுரம் (கிரீன்வேஸ் சாலை), லாக் தெரு கிழக்கு (கோட்டூர்புரம்), சித்ரா நகர் (கோட்டூர்புரம்), ஜோதியம்மாள் நகர்–அஞ்சுக்குடிசை (சைதாப்பேட்டை), திடீர் நகர் (சைதாப்பேட்டை), நெசப்பாக்கம், பர்மா காலனி (ராமாபுரம்), மணப்பாக்கம், மீனம்பாக்கம், தாராப்பாக்கம், அனகாபுத்தூர், தாம்பரம்வலதுபுரம், தாம்பரம்இடதுபுரம் மற்றும் வரதராஜபுரம் அருகே அமைக்கப்படும். சுத்தகரிக்கப்படும்நீரின் தரம், அடையாறு நதியில்மீன்வளத்தை வளர்க்கும் மற்றும் பல்லுயிர்பெருக்கத்திற்கான திறன் கொண்டமத்திய மாசு கட்டுபாட்டுநிறுவனத்தால்நிர்ணயிக்கப்பட்டுள்ள"கிளாஸ்D"வகையிலான நீர் நிலையாக தரம் உயர்த்திஆற்றின் நீரில் ஆக்ஸிஜன் அளவு 4.0 மி.கிராம்லிட்டருக்கு என்ற அளவில் பராமரிக்க முக்கிய தர குறியீடுகள்(pH 6.5 to 8.5, DO 4 mg/l or more and Free Ammonia as (N) 1.2 mg/l or less)நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மேலும் ஆற்றில் குறைந்தபட்ச சுற்றுச்சூழல் நீர் ஓட்டம், ஆற்றின்கொள்ளளவைமேம்படுத்துதல், நீரின் தரம் மற்றும் நீர்வாழ்உயிரினங்களின்பெருக்கத்தை உறுதி செய்தல், ஆற்றின் கரையில் மக்களின் மனம் கவரும் வகையில் சூர்யா நகர் (கோட்டூர்புரம்), காணு நகர் (ராமாபுரம்), பழைய அனுசுயா மண்டபம் (சைதாப்பேட்டை) மற்றும் பக்ஸ் சாலை (கிரீன்வேஸ் சாலை) ஆகிய இடங்களில் நான்கு பூங்காக்கள்மற்றும் நடைபாதைகள்அமைத்தல்,நதிக்கரை நெடுக பசுமை பரப்புகளை, ஆற்றங்கரை தாவர வகைகள்அதிகரிப்பது, மற்றும் மல்லிகைபூ நகர்

அருகே ஒரு திட்ட அனுபவ மையம் & SCADA மற்றும் CCTV மூலம் கண்காணிப்பு போன்ற சிறப்பு அம்சங்கள் கொண்ட பல்வேறு பணிகளை இத்திட்டம்உள்ளடக்கியுள்ளது.

தற்போதுஇத்திட்டத்திற்காக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், சென்னை ஆற்று படுகையில்முதற்கட்டமாகஅடையாறுஆற்றைப்மீட்டுருவாக்கும் நோக்கத்துடன் உருவாக்கப்பட்டுள்ளஒருங்கிணைந்தஇத்திட்டத்தினைநிறைவேற்றிடதேவையான 4,778.26 கோடி ரூபாய்க்கான நிர்வாக மற்றும் நிதி ஒப்புதலை வழங்கி,இப்பணிகளை துவங்கிட ஆணையிட்டு, உத்தரவு வழங்கியுள்ளார்கள்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in